தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in
Website: www.tnlbo.tn.gov.in


**முன்னிலை : திரு மகேசன் காசிராஜன் இ.ஆ.ப (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்: 206/மா/2024**

**நாள்: 01.08.2025**

| | | |
|---|---|---|
| திரு. B.சரவணன்<br>சென்னை | --- | முறையீட்டு மனுதாரர் |
| (1) மண்டல அலுவலர்,<br>மண்டலம்–10<br>பெருநகர சென்னை மாநகராட்சி<br>(2) உரிமையாளர்,<br>ரஹ்மாஸ் பிரியாணி கடை,<br>சென்னை. | --- | எதிர்மனுதாரர்கள் |

சென்னை–600 017, தியாகராய நகர், புது தெரு, கதவு எண் 1 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. B. சரவணன் என்பவரின் 25.10.2024 நாளிடப்பட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 28.10.2024 அன்று பெறப்பட்டு 206/மா/2024 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது:

## ஆணை

சென்னை–600 017, தியாகராய நகர், புது தெரு, கதவு எண் 1 என்கிற முகவரியில் வசிக்கும் திரு.B.சரவணன் என்பவர் தனது 25.10.2024 நாளிட்ட மனுவில் பின்வரும் புகார்களை தெரிவித்துள்ளார்:-

"கடந்த 9.9.2024 அன்று பொது மக்களுக்கான பொது பாதையை (RAHMAS) பிரியாணி கடை அசோக் நகர், 4வது அவின்யூ முழுவதுமாக ஆக்கிரமித்து ராட்சத டேபில் 10 அடி நீளத்தில், 15 அடி உயரத்தில் இரும்பு பழுப்புகளால் மாநகராட்சிக்கு சொந்தமான நிலத்தில் LED TV கம்பங்களில் அமைத்தும் லைட் பல்புகள் கயிறுகளால் பொது பாதையில் அமைத்துள்ளதால் பாதசாரிகள் இந்த பாதையை பயன்படுத்த முடியாமல் வேறுவழியின்றி நடுச்சாலையில் நடந்து செல்லும் அவலம் ஏற்படுகிறது. கிச்சன் அடுப்புகள் சிக்கன் செய்யும் மேடைகள் பிரியாணி டபராக்கள் என ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளதை இம்மனுவுடன் இணைக்கப்பட்ட புகைபடத்தில் காணலாம். இங்கு மீண்டும் மீண்டும் இதுபோல் ஆக்கிரமிப்பு செய்வதால் இவரை பார்த்து அனைவரும் இந்த சாலை முழுவதும் ஆக்கிரமிப்பு செய்துள்ளார்கள் என்பது மிகவும் கண்டிக்க கூடியது. எனவே, இது சம்பந்தமாக பலமுறை AE உமாசங்கர் அவர்களை சந்தித்து ஆக்கிரமிப்பு சம்மந்தமாக கேட்ட போது சரியான பதிலும் இல்லை நடவடிக்கையும் இல்லை போன் செய்தால் எடுப்பது இல்லை வாட்ஸ் அப்பில் அனுப்பினேன் அதுக்கும் பதில் இல்லை இதுக்கு மாறாக எனக்கு போன் செய்து மிரட்டுகிறார். ஏன் உங்களுக்கு இந்த வேலை என்னை கேக்காமல் இங்கு எதுவும் செய்ய கூடாது மனுவும் போடகூடாது என்று ஒருமையில் பேசி PH 9445190431 எண்ணிலிருந்து மிரட்டினார். அதற்கான (AUDIO) CALL RECORD என்னிடம் உள்ளது. இது போல் உள்ள அரசு அதிகாரிகளால் தான் இந்த அரசுக்கும் நேர்மையான அதிகாரிகளுக்கும் கெட்ட

பெயர். எனவே எனது புகார் மனு மீது நடவடிக்கை எடுக்குமாறு பணிவுடன் கேட்டு கொள்கிறேன்.'' என தெரிவித்துள்ளார்.

2. மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவ 15.11.2024 நாளிட்ட அறிவிப்பு மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 10–ன் மண்டல அலுவலரிடம் கோரப்பட்டது.

3. பெருநகர சென்னை மாநகராட்சி, மாவட்ட வருவாய் அலுவலர் / மண்டலம் 10–ன் மண்டல அலுவலர் தனது 02.06.2025 நாளிட்ட கடிதம் ம.அ.10 ந.க. எண் 206/மா/2024–ல் கீழ்க்கண்டவாறு அறிக்கை சமர்ப்பித்துள்ளார். அதில்–

"மனுதாரர் அளித்த புகாரின் அடிப்படையில், பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலர்களால் அசோக் நகர் 4வது நிழற்சாலையில் உள்ள RAHMAS BIRIYANI என்ற உணவக கட்டிடத்தில் களஆய்வு மேற்கொள்ளப்பட்டது. RAHMAS BIRIYANI என்ற உணவகமானது பொது நடைபாதையை ஆக்கிரமித்து இயங்கி வருகிறது என கள ஆய்வில் கண்டறியப்பட்டது. அதனை அகற்றிட அறிவுறுத்திய பின்னரும் அதன் உரிமையாளர் அகற்றாத காரணத்தினால் பெருநகர சென்னை மாநகராட்சி பணியாளர்கள் மூலம் RAHMAS BIRIYANI என்ற உணவகத்திற்கு சொந்தமான பொது நடைபாதையை ஆக்கிரமித்து இருந்த மின் விளக்குகள் மற்றும் மேஜைகள் ஆகியவை அகற்றப்பட்டது. இத்துடன் புகைப்படம் இணைக்கப்பட்டுள்ளது. தங்களின் கவனத்திற்கு தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. மேலும் மனுதாரர் கூறியதான போன் செய்து மிரட்டுவதாக புகார் அளித்தது முற்றிலும் தவறான தகவலாகும். மேற்கூறிய கூற்றுப்படி மனுதாரரின் புகாரானது பரிசீலிக்கப்பட்டு தகுந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.'' என தெரிவிக்கப்பட்டுள்ளது.

4. இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 15.07.2025 அன்று நடைபெறும் விசாரணைக்கு நேரடியாக ஆஜராகுமாறு 08.07.2025 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மனுதாரர் 15.07.2025 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்பு நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:

"பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 10, அசோக் நகர் 4வது நிழற்சாலை முழுவதுமாக RAHMAS BIRIYANI பிரியாணி கடை அசோக்நகர் 4–வது அவின்யூ முழுவதுமாக ஆக்கிரமித்து ராட்சத டேபிள் 10 அடி நீளத்தில், 15 அடி உயரத்தில் இரும்பு பைப்புகள், மாநகராட்சிக்கு சொந்தமான இடத்தில் LED TV அமைத்தும் மின் விளக்குகள் பொது பாதையில் அமைத்துள்ளதால் பாதசாரிகள் இந்த பாதையை பயன்படுத்த முடியாமல் வேறுவழியின்றி நடுச்சாலையில் நடந்து செல்லும் அவலம் ஏற்படுகிறது. கிச்சன் அடுப்புகள் சிக்கன் செய்யும் மேடைகள் பிரியாணி டபராக்கள் என ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளது. இது குறித்து மனு அளித்தும் உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

தற்போது பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 10ன் அலுவலர்களால் டேபிள், இரும்பு பைப்புகள் போன்ற ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டுவிட்டன. ஆனால் மின்விளக்குகள் மற்றும் அதற்காக போடப்பட்ட இரும்பு தூண்கள் ஆகியவை அகற்றப்படவில்லை. எனவே, இந்த ஆக்கிரமிப்புகளை முழுமையாக அகற்ற பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்10ன் மண்டல அலுவலருக்கு உத்தரவிடுமாறு இம்முறை மன்ற நடுவர் அவர்களை பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். ''

6. பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 10–ன் இளநிலை பொறியாளர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்பு 15.07.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.

“மனுதாரர் அளித்த புகாரின் அடிப்படையில், பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலர்களால் அசோக் நகர் 4–வது நிழற்சாலையில் உள்ள RAHMAS BIRIYANI என்ற உணவக கட்டிடத்தில் களஆய்வு மேற்கொள்ளப்பட்டு உணவகமானது பொது நடைபாதையை ஆக்கிரமித்து இயங்கி வருகிறது என கள ஆய்வில் கண்டறியப்பட்டது. அதனை அகற்றிட அறிவுறுத்திய பின்னரும் அதன் உரிமையாளர் அகற்றாத காரணத்தினால், பெருநகர சென்னை மாநகராட்சி பணியாளர்கள் மூலம் RAHMAS BIRIYANI என்ற உணவகம் பொது நடைபாதையை ஆக்கிரமித்து போடப்பட்டிருந்த மின் விளக்குகள் மற்றும் மேஜைகள் ஆகியவை அகற்றப்பட்டன. இதற்கான புகைப்பட நகலினை இம்முறை மன்ற நடுவர் முன் பணிந்து சமர்ப்பிக்கின்றேன். மனுதாரரின் புகார் மீது தகுந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று இம்முறை மன்ற நடுவர் அவர்களுக்கு பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.”

7. மற்றொரு எதிர்மனுதாரரான RAHMAS BIRIYANI கடையின் உரிமையாளர் அழைப்பாணை அனுப்பப்பட்டும் 15.07.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகவில்லை.

8. முறையீட்டு மனுதாரரின் மனு, வாக்குமூலம் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 10–ன் மாவட்ட வருவாய் அலுவலர் / மண்டல அலுவலரின் அறிக்கை மற்றும் இளநிலை பொறியாளரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 10, அசோக் நகர் 4வது நிழற்சாலை முழுவதுமாக RAHMAS BIRIYANI என்ற கடை மாநகராட்சிக்கு சொந்தமான நடைபாதை இடத்தில் கிச்சன் அடுப்புகள் சிக்கன் செய்யும் மேடைகள், பிரியாணி டபராக்கள், ராட்சத டேபிள் மற்றும் 10 அடி நீளத்தில், 15 அடி உயரத்தில் இரும்பு பைப்புகள், LED TV, மின் விளக்குகள் ஆகியவற்றை அமைத்து முழுவதுமாக ஆக்கிரமிப்பு செய்துள்ளதால் பாதசாரிகள் இந்த பாதையை பயன்படுத்த முடியாமல் நடுசாலையில் நடந்து செல்லும் அவலம் ஏற்படுகிறது என்பதும், தற்போது பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 10ன் அலுவலர்களால் டேபிள், இரும்பு பைப்புகள் போன்ற ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டுவிட்டன என்பதும், ஆனால் மின்விளக்குகள் மற்றும் அதற்காக போடப்பட்ட இரும்பு தூண்கள் ஆகியவை அகற்றப்படவில்லை என்பதும், அதனை முழுமையாக அகற்றுமாறு கோரியுள்ளதும் மனுதாரரின் மனு மற்றும் வாக்குமூலத்தின் வாயிலாக அறிய முடிகிறது.

மனுதாரர் அளித்த புகாரின் அடிப்படையில், பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலர்களால் அசோக் நகர் 4–வது நிழற்சாலையில் உள்ள RAHMAS BIRIYANI என்ற உணவக கட்டிடத்தில் களஆய்வு மேற்கொள்ளப்பட்டதில் பொது நடைபாதையை ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளது கண்டறியப்பட்டது என்பதும், பெருநகர சென்னை மாநகராட்சி பணியாளர்கள் மூலம் RAHMAS BIRIYANI கடையினால் பொது நடைபாதையில் அமைக்கப்பட்டு இருந்த ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டன என்பதும் பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 10–ன் மாவட்ட வருவாய் அலுவலர் / மண்டல அலுவலரின் அறிக்கை மற்றும் இளநிலை பொறியாளரின் வாக்குமூலம் வாயிலாக அறிய முடிகிறது.

இந்நேர்வில், மனுதாரர் அளித்த புகாரின் அடிப்படையில், பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலர்களால் அசோக் நகர், 4–வது நிழற்சாலையில் உள்ள RAHMAS BIRIYANI என்ற உணவகமானது பொது நடைபாதையை ஆக்கிரமித்து இயங்கி வருகிறது என கள ஆய்வில் கண்டறியப்பட்டு, ஆக்கிரமிப்புகள் பெருநகர சென்னை மாநகராட்சி பணியாளர்கள் மூலம் அகற்றப்பட்டன என்று பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 10–ன் மாவட்ட வருவாய் அலுவலர் / மண்டல அலுவலரின் அறிக்கையிலும் மற்றும் இளநிலை பொறியாளரின் வாக்குமூலத்திலும் தெரிவித்திருந்தாலும், மனுதாரர் தெரிவித்தவாறு நடைபாதையில் போடப்பட்டிருந்த மின்விளக்குகள், இரும்பு பைப்புகள் அகற்றப்படவில்லை என்பது அறிய முடிவதால், அதனை அகற்ற உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு மண்டலம் 10–ன் மாவட்ட வருவாய் அலுவலர் / மண்டல அலுவலருக்கு உரிய அறிவுரை வழங்குமாறு பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்ற நடுவம் பரிந்துரை செய்து ஆணையிடுகிறது.

2025–ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள்1–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

(ஒப்பம்)

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

(1) திரு. B. சரவணன்,
கதவு எண் 1 , புது தெரு,
கண்ணம்மாபேட்டை,
தியாகராய நகர்,
சென்னை–600 017.

(2) ஆணையர்,
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை,
சென்னை–600 003.

(3) மண்டல அலுவலர், மண்டலம் 10,
பெருநகர சென்னை மாநகராட்சி,
கோடம்பாக்கம்,
சென்னை–600 024.

(4) உரிமையாளர்,
ரஹ்மாஸ் பிரியாணி கடை,
4–வது அவின்யூ, அசோக் நகர்,
சென்னை–600 083.

(5) கண்காணிப்பாளர்/ஒருங்கிணைப்பாளர்,
மழைநீர் வடிகால் துறை,
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை,
சென்னை–600 003.

<u>நகல்</u>

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இ.கோ. / உதிரி.

//ஆணைப்படி / அனுப்பப்படுகிறது/

6/8/25

செயலாளர்.

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம்
சென்னை – 600 032